# தவக்காலத்திற்கான இறைவேண்டல்

ஆண்டவரே, உமக்கும் உம் விருப்பத்திற்கும் என்
உள்ளத்தைத் திறந்தருள உதவியருளும்.
நெருப்பூச்சூளையில் பொன் தூய்மைப்படுத்தப்படுவதைப்
போல
நீர் என்னை தூய்மைப்படுத்த விரும்புகிறீர் என்பதை நான்
அறிவேன்
நீர் என்னை உம் அன்பின் அக்கினியால் எரிக்கும்போது, அது
என்னை சுட்டாலும் அதை நான் முழு உள்ளத்தோடு
ஏற்றுக்கொள்ள எனக்கு உதவும்.
என் வேதனைகள், வலி, விரக்தி, துயரம் ஆகியவற்றைக்
கண்ணோக்காமல் உம்மிலே என் கவனத்தை வைக்கவும்,
நீர் என்னை தூய்மைப்படுத்த முன்வரும்போதெல்லாம் அதை
நான் எதிர்கொண்டு அனுமதிக்கவும் உதவியருளும்.
என்னை முழுவதும் அன்போடும் நம்பிக்கையோடும்
விருப்பத்தோடும் உமக்கே கையளிக்கிறேன்.
ஆண்டவரே என்னை நீர் அன்பு செய்து, அக்கறைக் காட்டி
எனக்காக உம் உயிரைக் கையளித்ததற்காகவும் நன்றி.
உம்மோடு நான் இன்னும் நெருங்கிவரவும்,
இத்தவக்காலத்தில் நீர் என்னைத் தூய்மைப்படுத்த
உம்மை முழுமையாக என்னுள் அனுமதிக்கவும் அருள்தாரும்.
உம்மை எதிர்த்து நில்லாமல், உம்மோடு ஒத்துழைக்கச்
செய்தருளும்,
உம்மையும் உம் அன்பையும் உணர்ந்துகொள்ள
செய்தருளும்.
இத்தவக்காலத்தை நான் வாழும்போது உம்மோடு நான்
அதிகமாக நெருங்கி வர உதவியருளும்.
நன்றி.
ஆமென்.

ARCHDIOCESE of KUALA LUMPUR
மாமறைமாவட்ட இறைவேண்டல் பணிக்குழு